(ஆ) (அ)என்னும் பந்தியின் கீழான தவறு தொடர்ந்து புரியப்படும் தவறொன்றாகவிருக்கின்றவிடத்து, அத்தகைய இணைய இடையீட்டாளர், எந்த நாளின் போது அத்தகைய தவறு தொடர்ந்து புரியப்படுகின்றதோ அந்த ஒவ்வொரு நாளுக்கும் ஐந்து இலட்சம் ரூபா மேலதிக குற்றப்பணமொன்றுக்கு ஆளாதல் வேண்டும்.

பாகம் VII

## புலனாய்வுகளுக்கு உதவுவதற்காக நிபுணர்களை நியமித்தல் மற்றும் அவர்களின் தத்துவங்கள்

*புலனாய்வுகளுக்கு உதவுவதற்காக நிபுணர்களை நியமித்தல்*

**37.** (1) நீதிமன்றம் அவசியமானது எனக் கருதுகின்றவிடத்து, அமைச்சர், வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் இச்சட்டத்தின் கீழான தவறொன்று தொடர்பில் ஏதேனும் புலனாய்வில் எவரேனும் பொலிஸ் அலுவலருக்கு உதவுவதற்கு (இதனகத்துப்பின்னர் "நிபுணர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தகவல் தொழில்நுட்பவியலில் குறித்துரைக்கப்பட்ட தகைமைகளையும் அனுபவத்தையும் கொண்டுள்ள ஆளொருவரை, நிறுவனம் ஒன்றை அல்லது ஆட்கள் குழுவொன்றை நியமிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்ட கட்டளை தகவல் தொழில்நுட்பவியலில் உள்ள பல்வேறு நிபுணத்துவத் துறைகளில் நிபுணர்களின் தகைமைகளையும் அத்தகைய நிபுணர்களின் நியமனமுறை மற்றும் விதத்தையும் நியமிப்பதற்கான நிபந்தனைகளையும் குறித்துரைத்தல் வேண்டும்.

(3) அத்தகைய புலனாய்வு நோக்கங்களுக்காக தேவைப்படுத்தக் கூடியவாறான அத்தகைய எல்லா உதவிகளையும் அளிப்பது நிபுணர் ஒருவரின் கடமையாதல் வேண்டும்.

(4) நிபுணர் ஒருவர், இச்சட்டத்தின் கீழான புலனாய்வொன்றின் நோக்கத்துக்காக, அத்தகைய நோக்கத்துக்காக உப பொலிசுப் பரிசோதகர் ஒருவரின் பதவிவரிசைக்குக் குறையாத பதவி வரிசையில் உள்ள பொலிஸ் அலுவலரொருவரினால் செய்யப்பட்ட

விண்ணப்பத்தின் மீது நீதிவானொருவரினால் அதன் சார்பாக வழங்கப்பட்ட ஆணைப்பத்திரமொன்றின் அதிகாரத்தின் கீழ்–

(அ) உப பொலிஸ் பரிசோதகர் ஒருவரின் பதவிவரிசைக்குக் குறையாத பதவி வரிசையில் உள்ள பொலிஸ் அலுவலர் ஒருவருடன் சேர்ந்து எவையேனும் வளவுகளுக்குள் நுழையலாம்; அத்துடன்

(ஆ) ஏதேனும் தகவல் முறைமை, கணினி அல்லது கணினி முறைமை அல்லது அத்தகைய கணினியில் வைத்திருக்கப்பட்ட ஏதேனும் செய்நிரல், தரவு அல்லது தகவலை அணுகலாம் மற்றும் ஏதேனும் பணியைப் புரிவதற்கு அல்லது அத்தகைய வேறு ஏதேனும் காரியத்தைச் செய்வதற்கு ஏதேனும் கணினியைச் செய்விக்கலாம்.

(5) இச்சட்டத்தின் கீழான புலனாய்வொன்றின் நோக்கங்களுக்காக, பொலிசுக்கு உதவுவதற்கு கோரப்பட்டுள்ள நிபுணர் ஒருவர், உப பொலிஸ் பரிசோதகரின் பதவி வரிசைக்குக் குறையாத பதவி வரிசையில் உள்ள பொலிஸ் அலுவலரொருவரினால் அளிக்கப்பட்ட அதிகாரத்துடன்–

(அ) அத்தகைய புலனாய்வு நோக்கத்துக்கு அவசியமான வாறு ஏதேனும் ஆவணம், தகவல், சாதனம் அல்லது வேறு பொருளை காண்பிக்குமாறு எவரேனும் ஆளை தேவைப்படுத்தலாம்;

(ஆ) ஏதேனும் போக்குவரத்துத் தரவை வெளிவிடுமாறு எவரேனும் ஆளைத் தேவைப்படுத்தலாம்;

(இ) வாய்மொழி மூலமாக எவரேனும் ஆளை விசாரணை செய்யலாம்; அத்துடன்

(ஈ) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக நியாயமானமுறையில் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய வேறு காரியங்களைச் செய்யலாம்.

